

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 7 | 15.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் | மேல் சிறுவளூர் கூட்டு ரோடு | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, ச.ஐஸ்வர்யா |
| 8 | 15.04.2025 | சேலம் கிழக்கு | வீரபாண்டி | ஆட்டையாம்பட்டி | முனைவர் இரா.தி.சபாபதி மோகன், கொ.ரமேஷ் |
| 9 | 16.04.2025 | சேலம் கிழக்கு | ஏற்காடு | பேருந்து நிலையம் எதிரில், வாழப்பாடி | நாஞ்சில் சம்பத், ரா.கிருத்திகா |
| 10 | 17.04.2025 | சேலம் கிழக்கு | ஆத்தூர் | ராணிப்பேட்டை | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, பெ.மலர்கொடி |
| 11 | 18.04.2025 | திருப்பூர் வடக்கு | பல்லடம் | அண்ணா திடல், பொங்கலூர் | எழுத்தாளர் வே.மதிமாறன், கி.ரேஷ்மா |
| 12 | 19.04.2025 | திருப்பூர் வடக்கு | திருப்பூர் வடக்கு | வெங்கமேடு, 9–வது வட்டம் | இரா.ராஜீவ் காந்தி, அ.நஸ்ரின் பானு |
| 13 | 19.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | கந்தர்வக்கோட்டை | பேருந்து நிலையம் அருகில் | தமிழ் கா.அமுதரசன், இ.நேரு |
| 14 | 19.04.2025 | கடலூர் கிழக்கு | புவனகிரி | கம்மாபுரம் | எழுத்தாளர் வே.மதிமாறன், ர.கோமதி |
| 15 | 19.04.2025 | திருச்சி வடக்கு | முசிறி | கைகாட்டி, பரிசில் துறை ரோடு | செந்தில்வேல், ம.சையது முஷரப் |
| 16 | 20.04.2025 | கடலூர் கிழக்கு | குறிஞ்சிப்பாடி | குள்ளஞ்சாவடி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, நா.சத்தியப்பிரியன் |
| 17 | 22.04.2025 | சேலம் கிழக்கு | கெங்கவல்லி | பேரூராட்சி அலுவலகம் அருகில், கெங்கவல்லி | திண்டுக்கல் ஐ.லியோனி, செ.முத்துகுமார் |
| 18 | 26.04.2025 | கடலூர் கிழக்கு | சிதம்பரம் | பரங்கிப்பேட்டை | நாஞ்சில் சம்பத், க.செல்வமணி |
| 19 | 27.04.2025 | கடலூர் கிழக்கு | காட்டுமன்னார்கோயில் | திருமுட்டம் | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, க.தமிழ்மணி |
| 20 | 27.04.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, சி.கா.சுகன் மந்த்ரன் |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 11–04–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மண்டலம் 9–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-04-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### கோவை வடக்கு மாவட்டம்

## ஆலாந்துறை பேரூர் செயலாளர் ஏ.கே.ரங்கசாமி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

கோவை, ஏப்.14–

கோவை வடக்கு மாவட்டம் ஆலாந்துறை பேரூர் கழகச் செயலாளர் ஏ.கே.ரங்கசாமி இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை மறைந்த ஏ.கே.ரங்கசாமி குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

மறைந்த ஏ.கே.ரங்கசாமி ஆலாந்துறை பேரூர் கழகச் செயலாளராக இருந்து அப்பகுதியில் கழகம் வளர்க்க அரும்பாடுபட்டவர். கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

இச்செய்தியறிந்ததும் மறைந்த ரங்கசாமி அவரது இல்லத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் நா.கார்த்திக், தொ.அ.ரவி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன் ஆகியோர் சென்று மறைந்த ரங்கசாமிக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

### அண்ணாநகர் 101 வது வட்டக் கழக முன்னோடி

## பொன்.கண்ணபிரான் மறைவு!

### எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, ஏப். 14 -

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டம், கழக முன்னோடியும், முன்னாள் அமைச்சர் ஆற்காடு நா.வீராசாமி அவர்களின் வாகன ஓட்டுநர் பொன்.கண்ணபிரான் நேற்று (13.04.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணி அளவில், இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.கே.மோகன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை, 100 வது வட்டக் கழகச் செயலாளர் ஆ.ஏகாம்பரம், மாவட்டக் கழகப் பிரதிநிதிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ 2 - நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு அன்னாரின் உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

### கழக பொதுக்குழு உறுப்பினர்

## கோவை வழக்கறிஞர் ம.மகுடபதி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப்.14–

கோவை மாவட்டம் கழகப் பொதுக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் ம.மகுடபதி மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை மறைந்த வழக்கறிஞர் ம.மகுடபதியின் குடும்பதினருக்கும், கோவை மாவட்டக் கழகத்தினருக்கும் தெரிவித்துள்ளார்.

## 14 ஆம் ஆண்டு நினைவு நாள்

14.04.2025



**எஸ்.நாகமுத்து**
35 (அ) வட்டக் கழக மு.செயலாளர்,
பெரம்பூர் வடக்கு பகுதி

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி : நினைவில் வாழும் **நா.வெள்ளையம்மாள்**
**நா.செல்வம்** B.Com - **சந்திரா**
**நா.தேவராஜ்** B.Sc - **சவுமியா** Ph.D
**நா.திவாகர்** (தொ.மு.ச) - **அமுதா**